


திருச்செந்தூர் வட்டம் ஆறுமுகநேரி பேரூராட்சி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிடத்தை தமிழக மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார். நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், தலைமை செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், வழக்கறிஞர் அணி கிருபாகரன், வி.பி. செல்வக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதி போகலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சத்திரகுடியில் ரூபாய் 49 லட்சம் மதிப்பீட்டில் துவங்கப்பட்ட குடிநீர் திட்டத்தை இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் ,மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன்,சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் வழக்கறிஞர் கதிரவன்,வழக்கறிஞர் குணசேகரன், அண்ணாமலை,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லட்சுமி பாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர் ராமச்சந்திரன் உட்பட கட்சி நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்




தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,கீழவைப்பார் ஊராட்சி,சிப்பிகுளம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ7 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடையினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், ராமசுப்பு நவநீத கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**டாக்டர் வே. ஆல்பன்**

**மார்ச் 18 (1999)**



**கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக ஏழு ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**திருவட்டாறு ஒன்றியத் தலைவராகவும் பின்னர் திருவட்டாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடிநிலையின்போது மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**“இனிய இயல்பினர், எவரிடத்தும் பண்புடன் பழகக்கூடிய மனப்பக்குவமுடையவர்” எனத் தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## நெல்லை கிழக்கில் ஆர்ப்பாட்டம்!

நெல்லை, மார்ச் 18–

நெல்லை கிழக்கு மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஒன்றிய பா.ஜ.க – NDA கூட்டணியின் தவறான வெளிநாட்டு கொள்கைகளால் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு (LPG) விலை உயர்வு மற்றும் எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறையால் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் நடவடிக்கைகளை கண்டித்து நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில்,நெல்லை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் வி.பி.துரை முன்னிலையில் களக்காடு மணிக்கூண்டு அருகில் வைத்து ஒன்றிய NDA அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் பங்கேற்று ஒன்றிய NDA அரசைக் கண்டித்து கண்டன உரையாற்றினார்.

நிகழ்வில் நகர செயலாளர் மணி சூரியன், ஒன்றிய செயலாளர்கள் ராஜன், செல்வகருணாநிதி,நகர்மன்ற தலைவர் சாந்தி சுபாஷ், பேரூர் செயலாளர்கள் அயூப்கான், கசமுத்து,முன்னாள் காங்கிரஸ் மாவட்ட தலைவர் மோகன் குமாரராஜா, தமிழ்ச் செல்வன், சி.பி.ஐ. ஒன்றிய செயலாளர் லெனின் முருகானந்தம், சி.பி.எம். ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,தே.மு.தி.க. ஒன்றிய செயலாளர் சக்திவேல், எஸ்.டி.பி.ஐ. மாவட்ட செயலாளர் மீராஷா, எஸ்டிபிஐ நகர தலைவர் பக்கீர் மைதீன், தே.மு.தி.க. நகர செயலாளர் பழனி, மாவட்ட வழக்கறிஞர் அணி பாலசுந்தர், மாவட்ட விவசாய அணி மாடசாமி மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மோடிக்கும் எடப்பாடிக்கும் மூச்சடைக்கச் செய்வோம்!

# முரசு கொட்டுவோம்! தளபதியை முதல்வராக்குவோம்!

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு விட்டது. வாக்குக் கேட்டு மக்களைச் சந்திக்க கழகத் தலைவரும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களும் தயாராகிவிட்டனர். யார் யாரோடு கூட்டணி வைத்து வந்தாலும் தேர்தலில் வெல்வதே நம் லட்சியம் என்பதை கழகத் தலைவர் இன்முகத்தோடும் நன்மொழியோடும் நலினமாக கூறிவிட்டார். பிறகென்ன களம்கண்டு புகஅஞ்சா புறநானூற்றுப்படை புறப்படத் தயாராகிவிட்டது. மே 4ம் தேதி காலை முதல் வரயிருக்கும் செய்தி வெற்றி! வெற்றி! வெற்றி! என்கிற இனிப்புச் செய்திதான் இன்பத் தேனாக காதில் கேட்கப் போகிறது. வெற்றியாளர்களை தமிழ்த் தாய் வாழ்த்திட காத்திருப்பாள்.

சோழ நாட்டின் சொக்கத் தங்கம், தமிழ்நாட்டின் சுத்தச்சிங்கம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமயன், நாட்டின் தர்மபுத்திரர், சளைக்காத உழைப்பாளி, ஆளுமையின் அதிசயம் அண்ணன் தளபதி அவர்களது ஆட்சியை நீக்குவதற்காகவே தேசிய ஜனநாயக கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மோடியும், எடப்பாடி பழனிச்சாமியும் கொக்கரித்துள்ளார். சீறியுள்ளனர் என்று எழுதினால் சிங்கத்துக்கு அசிங்கம்!

இன்று நடக்கும் ஆட்சியை விட சிறந்த ஆட்சியை தரவே கூட்டணிஅமைத்துள்ளோம்என்றால்அது அறிவுப்பூர்வமான பேச்சாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அழிப்பதற்காக கூட்டணி என்றால் எவ்வளவு இழிவான எண்ணம் பார்த்தீரா!

இஸ்ரேலுடன் சேர்ந்து கொண்டு டிரம்ப் மேலும் பல நாடுகளின் உதவியோடு ஈரானில் இனப்படுகொலை தான் செய்கிறார். ஈரானை அழிக்காமல் விடமாட்டேன் என டிரம்ப் கூறுவதற்கும், தி.மு.கவை ஒழிக்காமல் விடமாட்டேன் என பிரதமர் மோடி மற்றும் எடப்பாடி கூறுவதற்கும் எவ்வளவு ஒற்றுமை.

ரஷ்யாவிடம் எத்தனை பேரல் கச்சா எண்ணெய் எவ்வளவு காலம் வாங்கலாம் என்று அமெரிக்காவிடம் கைகட்டி வாய்பொத்தி மோடி நிற்பது உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிற்கே அவமானம். அந்த மோடியுடன் கூட்டணி வைத்து தான் எடப்பாடி பகல் கனவு கண்டு வருகிறார்.

திருச்சியில் நடந்த தேசிய ஜனநாயக கூட்டணி இப்படி எழுதுவதே தவறு. தேசிய சர்வாதிகார கூட்டணி என்றே எழுதத் தோன்றுகிறது. ஆம்! எடப்பாடியாரே உங்களுக்காகத் தான் இதை மாற்றி எழுதியுள்ளோம். அந்தக் கூட்டத்தில் ஆறு நுழைவு வாயில்களில் வைக்கப்பட்டிருந்த படங்களில் ஒரு படமாக எடப்பாடியார் படம் வைக்கப்படாதது ஏன்? அதோடு மட்டுமல்ல எடப்பாடியை கூட்டணியில் உள்ள பெரிய கட்சியான அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி என்று கூட மோடி பெயரைக் குறிப்பிடவில்லையே ஏன்?

பியூஸ்கோயலும், பிரதமர் மோடியும் ஒருமுறை கூட எடப்பாடியார் தலைமையிலான ஆட்சி அமையும் என்றும் எடப்பாடியார் தான் முதல்வர் என்றும் கூறவில்லை. என்.டி.ஏ கூட்டணி தான் ஆட்சி அமைக்கும் என்று தானே பேசினார்கள். இதை இல்லையென்று எடப்பாடியால் மறுக்க முடியுமா?

மேலும் பிரதமர் மோடி தி.மு.க தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்கிறார். எடப்பாடியோ நான்கில் ஒருபங்கு கூட நிறைவேற்றவில்லை என்கிறார். அன்புமணியோ 13... மட்டும் தான் நிறைவேற்றப்பட்டுள்ளன என்கிறார். நயினாரோ 20... என்கிறார். இதில் கூட உங்களிடையே ஒற்றுமை இல்லையே! பிறகு என்ன சாதித்து கிழிக்கப் போகிறீர்கள்?

பிரதமர் மோடி கடந்த 12 ஆண்டுகளில் ரூ.13 லட்சம் கோடி தமிழ்நாட்டிற்குக் கொடுத்துள்ளதாக கூறியுள்ளார். ஓராண்டு ஒன்றிய பட்ஜெட் எவ்வளவு தெரியுமா? ரூ. 53.47 லட்சம் கோடி. இதில் 12 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு தந்த நிதி பெரிய தொகையா?

தமிழக முதல்வர் கேட்ட கல்வி நிதி ரூ. 3500 கோடி, மக்களுக்கு அவசியமான குடிநீர் நிதி ரூ. 3200 கோடி, ஊரக வளர்ச்சி நிதி ரூ.3112 கோடி, பேரிடர் நிவாரண நிதி, சென்னை கோவை மெட்ரோ ரயிலுக்கான நிதி என அவசிய அவசர நிதிக்கு பணம் கேட்டால் தர மறுக்கும் பிரதமர் மோடிக்கு வாய்ஜாலம் எதற்கு? எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நட்ட அருண்ஜெட்லி மறைந்து பல வருடங்கள் ஆகிவிட்டது. 47... தான் பணி நடந்துள்ளது. அதைப் பற்றி பிரதமர் மோடி ஏன் பேசவில்லை?

இப்படி கேட்கும் நிதி எதையும் தராதவர் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி தந்ததை விட அதிகம் தாம் தந்துள்ளதாக மார்தட்டியுள்ளார். மன்மோகன் சிங் ஆட்சியில் பட்ஜெட் தொகை எவ்வளவு. அதைவிட நான்கு மடங்கு பிரதமர் மோடி ஆட்சியின் பட்ஜெட்! அதையும் இதையும் மோடி ஒப்பிட்டு பேசலாமா?

தமிழர்கள் அறிவாளிகள். உருட்டல் உருட்டுவது இங்கு எடுபடாது? தெருவில் நிற்கும் சின்னப் பையனைக் கூட பிரதமர் மோடியால் ஏமாற்ற முடியாது.

ரஷ்யாவிலிருந்து குறைந்த சலுகை விலையில் வாங்கிய எண்ணெயை சுத்திகரித்து இந்திய மக்களுக்கு குறைந்த விலையிலா ஒன்றிய அரசு கொடுத்தது. 1 பைசாவாவது பெட்ரோல் டீசல் விலை குறைக்கப்பட்டதா? ஆனால் அதில் கிடைத்த லாபம் 16 பில்லியன் டாலர் பணம் எங்கே போனது? மோடி வாங்கியுள்ள கடன் ரூ.205 கோடிக்கு ஈடாக கட்டப்பட்டதா? அதுதான் இல்லை. அவரது குஜராத் நண்பர் அதானிக்குத் தான் அந்தப் பணம் போனது என்று அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட் கூறியுள்ளார். இதுதான் மக்களுக்கான ஆட்சியா?

அமெரிக்காவிடம் கையேந்திய பிறகு இனி ரஷ்யா சலுகை விலையில் கச்சா எண்ணெய் தராது. இனி ஒன்றிய அரசு எத்தனை முறை தையதக்கா ஆட்டம் போட்டாலும் ரஷ்யாவிடம் எடுபடாது. அமெரிக்காவிடம் தான் பிரதமர் மோடி கைபிசைந்து நிற்க வேண்டும். டிரம்ப்போ நவீனக்கால ஹிட்லர். இனப் படுகொலையும் போரும் அவருக்கு இனிக்கும் பால்கோவா. போதாததற்கு தமிழகம் மோடி வரும் போதெல்லாம் திருநெல்வேலி அல்வாவை பா.ஜ.க தலைவர் டன் கணக்கில் தருகிறார். அதையும் பிரதமர் மோடி டிரம்ப்க்கு தருவார்.

கேஸ், சிலிண்டர் கிடைக்கவில்லை. இந்தியாவில் உற்பத்தி ஆகும் இயற்கை எரிவாயு 51... என்கிறார்கள். பிறகு ஏன் தட்டுப்பாடு? மக்கள் ஏன் சிலிண்டருக்கு அலைய வேண்டும்? அதற்காக கழகத் தலைவர் 15ஆம் தேதி போராட்டம் அறிவித்து நடத்தப்பட்டது. மேலும் முதல்வர் அவசர நடவடிக்கை எடுத்து மக்கள் வேதனை போக்க பிரதமருக்கு கடிதமும் எழுதியுள்ளார்.

இப்போது வாய்அளக்கும் எடப்பாடி, அன்புமணி போன்ற கூட்டணிக் கட்சியினர் பிரதமர் மோடியிடம் கேஸ் தட்டுப்பாட்டை தீர்க்க வலியுறுத்த வேண்டியது தானே? பா.ஜ.க தமிழக தலைவரோ சிலிண்டர் என்னிடம் உள்ளது தருகிறேன் தட்டுப்பாடு இல்லை என்கிறார். எத்தனை கோடி பேருக்கு அவரால் கொடுக்க முடியும்? ஏன் இந்த புருடா?

சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாம். பிரதமர் மோடியும் எடப்பாடியும் பேசியுள்ளனர். திராவிட மாடல் ஆட்சி அமைந்து இரண்டு மாதம் கூட ஆகாத போதே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று பேசியவர் தான் எடப்பாடி பழனிச்சாமி. இப்போது பேசுவது ஒன்றும் அதிசயமல்ல. அவருக்கு பேசத் தெரிந்தது அதுமட்டும் தான்.

பிரதமர் மோடி இந்தியாவை அமெரிக்காவின் அடிமையாக்கி விட்டார். தமிழகத்திற்கு கேட்ட நிதியும் தரவில்லை. தேர்தல் வந்தால் மட்டும் தமிழகம் வருகிறார். 1 லட்சம் சதுர கிலோ மீட்டருக்கு மேல் இந்திய நிலத்தை சீனா அபகரித்துவிட்டது. அதை கேட்க முடியவில்லை. பேசுவதற்கு சரக்கு இல்லை. அதனால் மதுரையில் பேசியதையே திருச்சியிலும் பேசியுள்ளார்.

வாரிசு அரசியலாம்! மோடி பேசலாமா? மோடி மந்திரி சபையில் எத்தனை பேர் வாரிசுகள் என்று எழுதலாமா? பா.ஜ.க ஆளும் 22 மாநிலங்களில் வாரிசுகள்O பட்டியலை எழுதலாமா? இந்திய கிரிக்கெட் பயிற்சியாளர் கவுதம் கம்பீர் ஜெய்ஷாவால் தான் இந்த பதவியில் இருக்கின்றேன். எனக்கு துணையாக இருக்கும் ஜெய்ஷாவிற்கு நன்றி என்கிறார். அவர் யார்? உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் மகன் தானே! அது வாரிசு இல்லையா? ஜெய்ஷா என்ன டெண்டுல்கரா, கபில்தேவா?



**வி.பி. கலைராஜன்**

**கழக இலக்கிய அணிச் செயலாளர்**

மக்கள் வாக்களித்து வெற்றி பெற செய்த பின் வாரிசு அரசியல் என்று பிரதமர் மோடி பேசலாமா? தமிழக முதல்வர் வாக்குகள் பெறாமல் ஆட்சியில் அமர்ந்தவரா? யாராக இருந்தாலும் பொறுப்பற்று பேசுவது கண்டிக்கத்தக்கது.

நீதிபதிகள் இடமாற்றத்தில் கூட பா.ஜ.க காரர் ஒருவருக்கு எதிராக தீர்ப்பு வழங்கினார் என்பதற்காக நீதிபதி ஆதுல்ஸ்ரீதவன் மத்திய பிரதேசத்திலிருந்து அலகாபாத் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். பிறகு கொலிஜியம் எதற்கு? இப்படி நீதித்துறையில் தனக்கு சாதகமாக இல்லாத நீதிபதிகள் வஞ்சிக்கப்படுகி றார்கள் என்று தற்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜன்புலான் கூறியுள்ளார். இதற்கு பெயர் தான் ஜனநாயகமா? இதை சட்ட அமைச்சரோ பிரதமரோ மறுத்தார்களா? முடியாது? கூறியது உச்ச நீதிமன்ற நீதிபதி. சட்டம் ஒழுங்கு ஸ்ரீநகரில் எப்படி உள்ளது என்பதற்கு ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் பருக் அப்துல்லா மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதே சான்றுக்கு ஒன்று. இதற்கு ஒன்றிய அரசு என்ன பதில் தரப்போகிறது? உள்துறை அமைச்சர் அமித்ஷாவாவது இதற்கு பதில் தருவாரா?

எடப்பாடி அவரது ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கட்டுக்கோப்பாக இருந்ததாக அறிக்கை விட்டுள்ளார். பொள்ளாச்சி சம்பவம், கொடநாடு கொலை கொள்ளை, ரயில் நிலையத்தில் மாணவி படுகொலை, நந்தினி மாணவி படுகொலை, ஹாசினி கொலை, ஸ்வாதி என்ற பெண் படுகொலை என எழுதினால் பட்டியல் தொடருமே. இதற்கு எடப்பாடி என்ன பதில் தரப் போகிறார்.

ஏன் எடப்பாடி ஆட்சியில் தூத்துக்குடியில் 13 பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனரே உடனே எடப்பாடியார் அங்கு சென்றாரா? ஒன்றரை ஆண்டு காலம் கழித்து தானே அங்கு சென்றார். மரக்காணத்தில் வன்முறை நடந்ததே. ஆனால் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த பாலியல் வன்கொடுமை குற்றவாளி ஞானசேகரன் 5 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டு 30 ஆண்டுகள் தண்டனை விதிக்கப் பட்டது. இதுதான் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் ஆளுமைத் திறன்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியாக இருப்பதால் தான் 64... பெண்கள் வேலைக்கு செல்கின்றனர். ஆனால் இந்தியாவில் 43... தான் வேலைக்கு செல்கின்றனர். வேறு எந்த மாநிலத்திலும் பெண்கள் இந்தளவிற்கு வேலைக்கு செல்லவில்லை. இந்த தமிழ்நாட்டிலா சட்டம் ஒழுங்கு சரியில்லை! முதலில் பாஜக ஆளும் 22 மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு ஒழுங்காக உள்ளதா? மணிப்பூர் இன்னும் எரிகிறது. கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். முதலில் அதை தடுத்து மக்களைக் காப்பாற்றுங்கள். உ.பி.யில் பசுவைக் காரணம் காட்டி சிறுபான்மையினர் மற்றும் பட்டியலினத்தவர் தினமும் கொலை செய்யப்படுகிறார்கள். புல்டோசரால் அவர்களது வீடு இடித்து தள்ளப்படுகிறது. இதை மறுக்க முடியுமா?

பா.ஜ.க.வை சேர்ந்த சுப்பிரமணிய சுவாமி அமெரிக்காவிற்கு ஏன் மோடி பயப்படுகிறார் என்பதைச் சொன்னால் மோடி பதவியை விட்டு ஓடி விடுவார் என்கிறார். அது என்ன? அதற்கு பிரதமர் மோடி ஏன் பதில் தர மறுக்கிறார்? உலகின் மிகப்பெரிய ஊழல்வாதி ஜெயலலிதா தான் என்றவர் தான் சுப்பிரமணிய சுவாமி. ஏன் இந்தியாவிலேயே மிகவும் ஊழல் மிகுந்த ஆட்சி எடப்பாடி ஆட்சி தான் என்று அமித்ஷா கூறினாரே. ஜெயலலிதா அம்மையாரை விட தன் மனைவியும், தாயும் ஆளுமையில் சிறந்தவர்கள் என்று அண்ணாமலை சொன்னாரே!

இதையெல்லாம் எடப்பாடியாரே மறந்து விட்டீர்களா? இதற்கு பிறகும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்துக் கொண்டிருக்கும் உங்களை அம்மையாரின் ஆன்மா கூட மன்னிக்காதே! நீங்கள் பேசலாமா?

பிரதமர் மோடியை நீங்கள் ஆயிரம் முறை அழைத்து வாருங்கள். அதுதான் நல்லது. வரும் 2026 தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தான் வெல்லும். இது சோழனின் கப்பல் போல் துடுப்பு இல்லாமலே பாய்ந்து எதிரிகளை தோற்கடிக்கும். தமிழக முதல்வர் அண்ணன் தளபதியையே மீண்டும் முதல்வராக மக்கள் ஆக்குவார்கள். இது நடக்கப் போவது நிச்சயம். எடப்பாடி ஏமாறப் போவதும் நிச்சயம். காத்திருக்கிறோம் களம்புகுந்திட! கழகத் தலைவர் கட்டளைக்கு!